**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

**OS.No**.811/2023 பெயர்- தனசேகரன் நாள்.25.03.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா. 1: பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றாலும், தற்சமயம் ஈரோடு சூரம்பட்டி காந்திஜி வீதியில் கதவு எண்.168ல் குடியிருந்து வருகிறேன் என்றாலும், சரிதான். என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் என் அப்பா கிரையம் வாங்கிய சொத்தின் விலாசத்தில் குடியிருந்து வருகிறேன் என்று குறுப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். நான் குடியிருக்கும் வாடகை வீட்டிற்கு எவ்வளவு வாடகை கொடுத்து வருகிறேன் என்றால், ரூ.8000/-ம் கொடுத்து வருகிறேன் நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், ஜவுளி தொழில் செய்து வருகிறேன். நான் சொந்தமாக ஜவுளி தொழில் செய்து வருகிறேன். DRN டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறே.ன மேற்படி DRN டெக்ஸ்டைல்ஸ் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால், பதிவு செய்யப்பட்டுள்ளது. அது துரைசாமி மற்றும் தனசேகரன் ஆகிய என் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. என் அப்பா ஜவுளி கூலி வேலை செய்து வந்தார். என் அப்பாவிற்கு மாத வருமானம் எவ்வளவு வந்தது என்று எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை கோரி நான் தாக்கல் செய்து இந்த வழக்கு சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், பாப்பாயம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்தது. மேற்படி பாப்பாயம்மாளிடம் இருந்து நாங்கள்

கிரையம் வாங்கினோமா என்றால் பாப்பாயம்மாள் பெயரில் இருந்து என் சித்தப்பா பெயருக்கு வாங்கப்பட்டு, என் சித்தப்பா இறந்ததற்கு பின்னிட்டு என் சித்தி பெயருக்கு மாறி சித்தியிடம் இருந்து நாங்கள் கிரையம் வாங்கினோம். பாப்பாயம்மாள் என் சித்தப்பாவிற்கு சொத்தை கிரையமாக எழுதிக் கொடுத்தார். சொத்தை கிரையம் வாங்கியதாக குறிப்பிட்ட தேதிக்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக மேற்படி சொத்தை கிரையம் பேசினோம் என்றால், 2018ல் எனது சித்தப்பா இறந்துவிட்டார், அதிலிருந்து மேற்படி சொத்தை கிரையம் வாங்க பேசினோம். இறுதியாக எப்போது முடிவு செய்யப்பட்டது என்றால், 2020ம் வருடத்தில் 2ம் மாதத்தில் முடிக்கப்பட்டது. தேதி குறிப்பாக நினைவில் இல்லை. ரூ.9,90,000/-க்கு கிரையம் பேசப்பட்டது. முன் தொகை எதுவும் கொடுக்கப்படாமல் முழு கிரைய தொகை கொடுக்கப்பட்டு கிரையம் வாங்கப்பட்டதா என்றால், ஆமாம். மேற்படி கிரைய தொகையில் என்னுடைய பங்கு தொகையை நான் யாரிடம் கொடுத்தேன் என்றால், என் சித்தியிடம் கொடுத்தேன். என்னுடைய சித்தியின் பெயர் சரவணாம்பிகை ஆகும். மேற்படி கிரையப்பத்திரத்தில் எழுதி வாங்குவோர் என்ற இடத்தில் நான் 3வதாக கையெழுத்து செய்துள்ளேன். மேற்படி கிரையப்பத்திரத்தில் கையெழுத்து போடுவதற்கு முன்பாக அதை நான் படித்துப் பார்த்தேனா என்றால், படித்துப் பார்த்தேன். கிரைய பதிவு கட்டணம் செலுத்தி விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். மேற்படி பதிவு கட்டணம் முத்திரைத்தாள் வழியாக செலுத்தப்பட்டதா அல்லது வங்கி பரிவர்த்தனை மூலமாக செலுத்தப்பட்டதா என்றால், நினைவில் இல்லை. எனது சித்தப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் மொத்தம் அவருக்கு எவ்வளவு விஸ்தீரனம் பாத்தியப்பட்டது என்றால், 1016 சதுர அடி பாத்தியப்பட்டது ஆகும். நாங்கள் கிரையம் வாங்கிய சமயத்தில் தாவா

சொத்தில் வீடு இருந்ததா என்றால், இருந்தது. வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கிரையப்பத்திரத்தில் 14வது பக்கத்தில் மேற்படி மனைநிலத்தில் கட்டிடம் ஏதும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரையப்பத்திரத்தில் சாட்சிக் கையெழுத்து போட்ட நபர்கள் யார் என்றால், கோபாலகிருஷ்ணன் மற்றும் பாலசுந்தரம் ஆகியோர் ஆகும். மேற்படி கிரையப்பத்திரத்திற்கான கிரைய பதிவு கட்டணம் முழுவதும் என்னுடைய தகப்பனாரால் செலுத்தப்பட்டது என்று மேற்படி கிரையப்பத்திரத்தில் பக்கம் 19ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு நிரந்தரமான தொழிலோ, வருமானமோ கிடையாது என்றால், சரியல்ல. என்னுடைய சித்தப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தில் எந்த பக்க சொத்தை நான் கிரையம் பெற்றேன் என்றால், வடக்கு பக்கம் உள்ள பாகத்தை கிரையம் பெற்றேன். நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. கிரைய ஆவணத்திற்கான எல்லா விவரங்களும் என் தகப்பனரால் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால், சரியல்ல, அனைவரும் சேர்ந்துதான் கூறினோம். கிரையத் தொகை ரொக்கமாகத்தான் கொடுக்கப்பட்டது. தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்னிட்டு தாவா சொத்தை சார்பதிவாளர் வந்து பார்த்து விட்டுப் போனாரா என்றால், பார்த்து விட்டுப் போனார். அவ்வாறு பார்த்து விட்டுப் போனதற்கு பின்னிட்டு தொகை செலுத்தவேண்டும் என்று சொல்லிவிட்டுப் போன விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. கிரையப்பத்திரத்தின் சான்று நகலை பெற்றதற்கு பின்னிட்டு அதை நான் படித்துப் பார்த்தேனா என்றால், படித்துப் பார்க்கவில்லை. தற்சமயம் என்னிடம் காட்டப்படும் மேற்படி வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தின் கடைசி பக்கத்தில் ரூ.9000/- முத்திரை குறைவுக்கட்டணம் வசூலிக்கப்பட்டதாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த தொகையை செலுத்தியது P. துரைசாமி ஆகிய எனது தகப்பனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். 20.03.2023ல் நான் பாகத்தை பிரித்துக் கொடுக்கக்கோரியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் வழக்கறிஞர் மூலமாக பாகப்பிரிவினை கோரி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால், இல்லை. கிரையம் பெற்ற தேதியிலிருந்தே தாவா சொத்தில் நானோ, 2ம் பிரதிவாதியோ தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றாலும், எனது தகப்பனாரான 1ம் பிரதிவாதி மட்டும்தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால், சரியல்ல. தாவா சொத்து மூன்று தளங்களைக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அது அடுக்குமாடி கட்டிடமா என்றால் இல்லை லைனாக மூன்று வீடுகள் அமைந்துள்ளது. தமிழில் தட்டச்சு செய்யும்போது அவ்வாறு தட்டச்சு செய்யப்பட்டு விட்டது. நான் தாவா சொத்தில் எந்த காலத்திலும் 1ம் பிரதிவாதியுடன் சொத்தில் கூட்டு சுவதீனத்தில் இருந்தது இல்லை என்றால், சரியல்ல. தாவா சொத்திற்கான கிரையத்தொகை முழுவதும் எனது தகப்பனாரான 1ம் பிரதிவாதியால் செலுத்தப்பட்டது என்றால், சரியல்ல. மேற்படி கிரைய சமயத்தில் எனக்கு போதிய வருமானம் இருந்ததை காட்டக்கூடியதான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால், தாக்கல் செய்கிறேன். தாவா சொத்தை பிரதிவாதிகள் மூன்றாம் நபர்களுக்கு விற்பனை முயற்சி செய்து வருவதாக சொல்லியுள்ள விவரங்கள் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டது என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை எந்த காலத்திலும் விற்பனை செய்ய முயற்சிக்கவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தில் நான் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருவதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், பத்திரத்தில் பெயர் உள்ளது, வருவாய்த்துறை

ஆவணங்களில் பெயர் இல்லை. தாவா சொத்தைப் பொறுத்து வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா சொத்தை எனது தகப்பனார் அவருடைய பணத்தில் கிரையம் பெற்ற சமயத்தில் எனது பெயரிலும் கிரையப்பத்திரத்தில் சேர்க்க வேண்டும் என்று கட்டாயப்படுத்திய காரணத்தினால் மேற்படி கிரையப்பத்திரத்தில் எனது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. தாவா சொத்தில் எனது தகப்பனார் தான் குடியிருந்து வருகிறார் என்றால், 2ம் பிரதிவாதியான எனது அண்ணன் அவரது குடும்பத்துடன் 1ம் பிரதிவாதியான எனது தகப்பனாருடன் சேர்ந்து வசித்து வருகிறார். கிரையப்பத்திரத்தில் எனது பெயர் உள்ளது என்ற அடிப்படையில் பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்திலும், அனுபவத்திலும் நான் இல்லை என்ற நிலையில் கூட்டு சுவாதீனத்தில் இருபபதாக குறிப்பிட்டு நான் தவறான நீதிமன்ற கட்டணம் செலுத்தி உள்ளேன் என்றால், சரியல்ல. மேற்படி கிரையப்பத்திரத்தில் எனது பெயர் சேர்க்கப்பட்ட காரணத்தினால்தான் 2ம் பிரதிவாதியான எனது சகோதரரின் பெபயரும் மேற்படி கிரையப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. தாவா சொத்தில் நான் கோரியுள்ள 1/3 பங்கு பாத்தியம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. தாவா சொத்து பிரிக்க இயலாத சொத்து என்றால், சரியல்ல. அப்படி பிரித்தால் அது பயனற்றதாக ஆகிவிடும் என்றால், சரியல்ல. நான் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும், தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும், சரியல்ல.